பாடம் - 4
இஸ்லாமிய இறைவழிபாடு

الدرس الرابع
العبادة في الإسلام

இஸ்லாத்தில் எந்த வழிபாடும் அல்லாஹ்வுக்காக என தூய்மையான எண்ணத்துடன் செய்தாலே ஒழிய ஏற்கப்பட மாட்டாது. மேலும் அந்த வழிபாடு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்துக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். உதாரணமாக தொழுகை ஒரு வணக்கமாகும். இது அல்லாஹ்வுக்காகவே நிறைவேற்றப்பட வேண்டும். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் காட்டிய வழிமுறையிலும் அமைய வேண்டும். இதற்குப் பல காரணங்கள் உள்ளன:

**1.**வணக்க வழிபாடுகளை அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே செய்யவேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். அல்லாஹ்வுடன் வேறொருவரை- வேறொன்றை வணங்குவது அவனுக்கு இணைவைப்பதாகும். அல்லாஹ் கூறுகிறான்: ‘அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுடன் எதனையும் இணைவைக்காதீர்கள்.’ (4:36)

**2.**சட்டங்கள் வகுத்தளிக்கும் அதிகாரத்தை அல்லாஹ் தனக்கே உரித்தாக்கிக் கொண்டான். அது அவனுக்குரிய உரிமையாகும். யாரேனும் அல்லாஹ் அங்கீகரித்த முறைகளை விட்டு விட்டு வேறொன்றை வணக்கமாக எடுத்துக் கொண்டால் இவ்வதிகாரத்தில் அல்லாஹ்வுக்கு இணை வைத்தவனாவான்.

**3.**அல்லாஹ் இந்த இறைமார்க்கத்தை நமக்கு பரிபூரணமாக்கி விட்டான். அப்படியிருக்க ஒருவன் சுயமாக ஒரு வணக்கத்தை உருவாக்கிக் கொண்டால் இறை மார்க்கத்தில் குறை இருப்பதாக அவன் சந்தேகிப்பதாக ஆகிவிடும்.

**4.**மனிதர்கள் தாம் விரும்பியதை தாம் விரும்பும் விதத்தில் வணக்கமாக ஆக்கிக் கொள்ளலாம் என்று இருந்தால் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வணக்கமும் வழிபாட்டு முறையும் உருவாகியிருக்கும். காரணம் ஒவ்வொருவரின் ரசனையும் மாறுபட்டிருக்கிறதே!

### இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள்

அல்லாஹ் விதித்துள்ள இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் ஐந்தாகும்.

**1.**வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை. முஹம்மது நபி(ஸல்)அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என உறுதியாக நம்புவது.
**2.**தொழுகையை நிலைநாட்டுவது.
**3.**ஸகாத் கொடுப்பது.
**4.**ரமழானில் நோன்பு நோற்பது.
**5.**ஹஜ் செய்வது.

### இஸ்லாம் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது என்ன?

ஒரு முஸ்லீம் இந்த உலகத்தை துறந்து வாழவேண்டும் என ஒருமுறை கூட இஸ்லாம் சொல்லவில்லை, அதற்கான சமிக்ஞையை கூட செய்யவில்லை, மசூதிகளில் வாழவேண்டும், அதிலிருந்து வெளியேறக்கூடாது என்றோ, தனது வாழ்நாளைக் குகையில் கழிக்கவேண்டுமென்றோ இஸ்லாம் கூறவில்லை. மாறாக முஸ்லிம்கள் நல்ல பண்பாட்டாளர்களாகவும் நாகரிக மக்களுக்கு மத்தியில் சிறந்தவர்களாகவும் திகழ விரும்புகிறது, பொருளாதாரத்தில் செல்வந்தர்களாகவும், அறிவில் சிறந்த அறிஞர்களாகவும் இருக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு முஸ்லிமும் அவரது உடலுக்கு கொடுக்கவேண்டிய உரிமையை அறிந்திருக்க வேண்டும், அதற்கான உணவு, உடற்பயிற்சிகளை அவர் மேற்கொள்ள வேண்டும். ஹராம் அல்லாத மனதை மகிழ்விக்கும் கேளிக்கை, பொழுதுபோக்குகளில் தன்னை ஈடுபடுத்தவேண்டும், அவரது குடும்பத்தின் மீது அக்கறை செலுத்துதல் மற்றும் நல்லமுறையில் நடந்து கொள்ள வேண்டும், தன் குழந்தைகளுக்கு நல்லொழுக்கம், கல்வியை கொடுத்தல் மேலும் அவர்கள் மீது இறக்கம் காட்டுதல், சமூகத்தில் அனைவருக்கும் கொடுக்வேண்டிய உரிமையை வழங்குதல், அதேபோல் அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகளான ஏகத்துவம் மற்றும் அல்லாஹ்விற்கு கீழ்ப்படிதலை அறிந்திருக்க வேண்டும் என இஸ்லாம் நம்மிடம் எதிர்பார்கிறது.

### இஸ்லாம் முந்தைய நிலையை மாற்றுகிறது

ஒரு காஃபிர் இஸ்லாத்தை தழுவும் போது அவன் அல்லாஹ்வின் கட்டளைக்கு மாற்றமாக செய்த பாவங்கள், அவனை விட்டும் முழுமையாக மன்னிக்கப்படுவது அல்லாஹ்வின் மகத்தான் அருளாக இஸ்லாத்தில் உள்ளது. மேலும் அதிகமான பாவங்களை செய்த முஸ்லிமிற்கு பாவமன்னிப்பின் வாயில் எப்போதும் திறந்தே இருக்கிறது, ஒருவன் நாடும்போது எப்போதும் பாவமன்னிப்பை தேடலாம், அதாவது ஆதமுடைய மகன் அனைவரும் தவறிழைப்பவர்களே, அதில் சிறந்தவர்கள் பாவத்திற்காக பாவமன்னிப்பு தேடுபவர்களே,நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் - மனிதன் தீங்கிழைக்கும் போது அல்லாஹ் தன் அடியானுக்காக பாவமன்னிப்பின் வாயிலை திறக்கிறான் மேலும் தவ்பா செய்யும் படி கட்டளையும் இடுகிறான்.

### இஸ்லாமிய மார்க்கத்தில் இணைதல்

இஸ்லாத்தில் இணைவது ஒவ்வொருவரின் மீதும் கடமையாகும், சொர்க்கம் செல்வதற்கும் நரகிலிருந்து தப்பிப்பதற்கும் இஸ்லாத்தைத் தழுவுவதைத் தவிர வேறு வழியில்லை ஒருவர் இஸ்லாத்தைத் தழுவ விரும்பினால் - வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதையும் முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதையும் நம்ப வேண்டும். இதனை உங்கள் நாவால் மொழியவும் வேண்டும். பின்னர் இஸ்லாமியக் கடமைகளைக் கற்றுக் கொள்ளத் தொடங்க வேண்டும். உதாரணமாக - தொழுகை மற்றும் பிற விஷயங்கள், இது சம்பந்தமாகத் தெளிவாக விளக்கக்கூடிய நூல்கள் ஏராளம் உள்ளன.